ஶ்ரீ:

ஶ்ரீமதே நிகமாந்தமஹாதேஶிகாய நம:

ஶ்ரீமாந் வேங்கடநாதார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதாந்தாசார்யவர்யோ மே ஸந்நிதத்தாம் ஸதா ஹ்ருதி ॥

ராஜகோபாலதாஸன் அருளிச்செய்த

# ॥ ரங்கா ரங்கா ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஶ்ரீ ரங்கராமாநுஜ மஹாதேஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

---

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ரங்கா ரங்கா ॥

## அனைத்தும் அரங்கனே

உந்தியில் படைத்தாய் ரங்கா ரங்கா⋆
    உலகம் உண்டாய் ரங்கா ரங்கா⋆
அந்தியில் அழித்தாய் ரங்கா ரங்கா⋆
    அவனி அளந்தாய் ரங்கா ரங்கா⋆
மந்திர மேடையில் ரங்கா ரங்கா⋆
    மாயமே செய்தாய் ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
    திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (1)

## திருவரங்கமும் பரமபதமும்

வான்நதி விரஜா ரங்கா ரங்கா⋆
    தேனாறு காவிரி ரங்கா ரங்கா⋆
ஒண்மதி அமரர் ரங்கா ரங்கா⋆
    ஒரெழுத்து விமானம் ரங்கா ரங்கா⋆
விண்ணில் மறை ரங்கா ரங்கா⋆
    மண்ணில் இறை ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
    திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (2)

## திருவரங்கத் தலம்

காவிரி கிடப்பாய் ரங்கா ரங்கா⋆
    பாய்விரித்த நாகம் ரங்கா ரங்கா⋆
சுற்றேழு நடுவே ரங்கா ரங்கா⋆
    சுகமாய் உறங்கிட ரங்கா ரங்கா⋆

prapatti dot com

மணத்தூண் உள்ளே ரங்கா ரங்கா⋆
மனத்தின் உள்ளும் ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (3)

## பெரிய பெருமாள் திருக்கோலம்

படுக்கை அரவணை ரங்கா ரங்கா⋆
வலக்கை தலையணை ரங்கா ரங்கா⋆
இடக்கை திருவடி ரங்கா ரங்கா⋆
இலக்கென காட்டிட ரங்கா ரங்கா⋆
தென்திசை எதிரே ரங்கா ரங்கா⋆
திவம் இங்கிதுவே ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (4)

## பெரிய பெருமாள் பெருமை

இந்திரர் இறைவா ரங்கா ரங்கா⋆
மந்திர மணமே ரங்கா ரங்கா⋆
அந்தமில் ஆதியே ரங்கா ரங்கா⋆
சுந்தரச் சோதியே ரங்கா ரங்கா⋆
வந்தவர் வினைகெட ரங்கா ரங்கா⋆
செந்நிற புன்னகை ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (5)

## திருவரங்க அடியவர்கள்

ஆழ்வார் அனைவரும் ரங்கா ரங்கா⋆
அலற்றும் அமலா ரங்கா ரங்கா⋆
தாழ்வாய் நிற்பார் ரங்கா ரங்கா⋆
திருவடி தப்பார் ரங்கா ரங்கா⋆



prapatti dot com

வாழ்வார் மகிழ்ந்து ரங்கா ரங்கா⋆
    வைகுந்தம் இகழ்ந்து ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
    திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (6)

### அடைக்கலம்

சரணம் ஒன்ற ரங்கா ரங்கா⋆
    மரணம் ஒன்றே ரங்கா ரங்கா⋆
தரணி கடத்த ரங்கா ரங்கா⋆
    தனிமை கண்டேன் ரங்கா ரங்கா⋆
அரணாம் விளிக்க ரங்கா ரங்கா⋆
    அபயம் அளிப்பாய் ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
    திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (7)

### முடிவுரை

திருக்கோயில் இதுவே ரங்கா ரங்கா⋆
    திருத்தலம் எல்லாம் ரங்கா ரங்கா⋆
இருநாலு எழுத்தும் ரங்கா ரங்கா⋆
    பெருவான் இழுக்கும் ரங்கா ரங்கா⋆
திருமலை அப்பா ரங்கா ரங்கா⋆
    பெருங்குல நிதியே ரங்கா ரங்கா⋆
திருவடி அடைந்தேன் ரங்கா ரங்கா⋆
    திருவருள் பெற்றேன் ரங்கா ரங்கா! (8)

prapatti dot com